# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2073/38 - 2018 මැයි මස 31 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.05.31

*2073/38 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்*

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு உத்தேச பண்டாரவளை - தியதலாவை நீர் வழங்கல் கருத்திட்டத்தின் டயரபாவத்த பிரதான நீர்த்தொட்டியை நிர்மாணிப்பதற்காக இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக் கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்*
*அமைச்சர்.*

*நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,*
*இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2018, ஏப்பிறல் 23,*
*5/2/1/1366.*

**அட்டவணை**

*பதுளை மாவட்டத்தில், வெலிமடை பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 58D, டயரபாவத்த கிராம அலுவலர் பிரிவில், டயரபாவத்த கிராமத்தில் அமைந்துள்ள டயரபாவத்த பஹல கொடச பிரிவு இலக்கம் 05 என்றழைக்கப்படும் காணியின் முழு விஸ்தீரணத்தில் இருந்து அண்ணளவாக 80 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தைக் கொண்ட பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.*

| | | |
|---|---|---|
| *வடக்கு* | : | *டயரபா தேயிலைத் தோட்டம் ;* |
| *கிழக்கு* | : | *டயரபா தேயிலைத் தோட்டம் ;* |
| *தெற்கு* | : | *டயரபா தேயிலைத் தோட்டம் மற்றும் உட்பிரவேச வீதி ;* |
| *மேற்கு* | : | *டயரபா தேயிலைத் தோட்டம்.* |

*காணிக்கு உரிமைகோருபவரின் பெயரும் முகவரியும் : வரையறுக்கப்பட்ட மல்வத்த பெருந்தோட்ட நிறுவனம்,*
*டயரபா வத்த,*
*மீரஹாவத்த, வெலிமடை*

*06- 656*

## *1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்*

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை கழிவு நீரமைப்பு செயற்திட்டத்தின்கீழ் 3 ஆம் இலக்க நீர் இறைக்கும் இயந்திரசாலையை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதியொன்றினை சுவீகரித்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக் கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்*
*அமைச்சர்.*

*நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,*
*இல. 35, 'லக்திய மெதுர',*
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2018, ஏப்பிறல் 23,*
*5/2/2/1367.*

***அட்டவணை***

*கொழும்பு மாவட்டத்தில், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 519, நுகேகொடை கிராம அலுவலர் பிரிவில் பாகொட வீதி கிராமத்தில் அமைந்துள்ள தியவன்னா பூங்கா வீதியில் இலக்கம் 29 வீட்டுக் காணிக்கு அருகாமையிலுள்ள காணியின் முழு விஸ்தீரணத்தில் இருந்து அண்ணளவாக 10 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.*

| | | |
|---|---|---|
| *வடக்கு* | : | *வெல்லபட பிளேஸ் வீதி ;* |
| *கிழக்கு* | : | *வெல்லபட பிளேஸ் வீதி மற்றும் 29 ஆம் இலக்கத்தையுடைய வீட்டுக் காணி ;* |
| *தெற்கு* | : | *தியவன்னா பூங்கா வீதி ;* |
| *மேற்கு* | : | *தியவன்னா பூங்கா வீதி மற்றும் உரிமையாளரைத் தெரியாத வெற்றுக் காணி.* |

*காணிக்கு உரிமைகோருபவரின் பெயரும் முகவரியும் : கண்டறிய முடியவில்லை.*

*06- 657*

---

## *1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்*

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை கழிவு நீரமைப்பு செயற்திட்டத்தின்கீழ் 2 ஆம் இலக்க நீர் இறைக்கும் இயந்திரசாலையை*

*நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதியொன்றினை சுவீகரித்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக் கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்*
*அமைச்சர்.*

*நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,*
*இல. 35, 'லக்திய மெதுர',*
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2018, ஏப்பிறல் 23,*
*5/2/2/1363.*

**அட்டவணை**

*கொழும்பு மாவட்டத்தில், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 514B, ராஜகிரிய கிராம அலுவலர் பிரிவில் ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தையில் அமைந்துள்ள தியவன்னா பிரதேசத்தின் கிராம இலக்கம் 981/5B வீட்டுக் காணிக்கு முன்னால் காணப்படும் காணியின் முழு விஸ்தீரணத்தில் இருந்து அண்ணளவாக 12 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.*

| | | |
|---|---|---|
| வடக்கு | : | இலக்கம் 981/5B இற்குரிய வீட்டுக் காணி ; |
| கிழக்கு | : | இக்காணியின் மீதமாயுள்ள காணிப்பகுதி ; |
| தெற்கு | : | இக்காணியின் மீதமாயுள்ள காணிப்பகுதி ; |
| மேற்கு | : | இலக்கம் 981/5C இற்குரிய வீட்டுக் காணி. |

*காணிக்கு உரிமைகோருபவரின் பெயரும் முகவரியும் : கண்டறிய முடியவில்லை.*

*06- 658*